மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்
පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත්
PROVINCIAL DEPARTMENT OF EDUCATION, NORTHERN PROVINCE

# தமிழ்மொழியும் இலக்கியமும்
## சுயகற்றல் செயற்பாடு
## தரம் - 07

### அலகு 8
### செந்தமிழ் போற்றிய சேரன்

**1. பெருஞ்சேரல் இரும்பொறை சேர மன்னன் எங்கே எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தான்?**
தமிழ் நாட்டின் வஞ்சியை தலைநகராகக்கொண்டு ஏறத்தாள 17 ஆண்டுகள் ஆட்சி செய்தான்.

**2 பெருஞ்சேரல் இரும்பொறை சேர மன்னனின் சிறப்புக்கள்**
- வீரத்திலும் கொடையிலும் நியாயத்தலும் சிறந்தவன்.
- மும்முரசங்களை உடையவன்.
- பேருபகாரி.
- புலவர்களைப் போற்றுபவன்.

**3. மும்முரசங்கள் எவை?**
- நியாய முரசு
- வீர முரசு.
- தியாக முரசு.

**4. பெருஞ்சேரல் இரும்பொறை மன்னனின் அவைக்கு வந்த புலவர் யார்?**
மோசிகீரனார்.

**5. மோசிகீரனார் செய்த செயல் என்ன?**
நெடுந்தூரத்தில் இருந்துவந்த களைப்பின் காரணமாக வீரமுரசம் வைக்கப்படும் முரசுக் கட்டிலில் அயர்ந்து தூங்கினார்.

**6. வீரமுரசம் எனப்படுவது யாது?**
மும்முரசங்களுள் ஒன்று.
போர்க்காலங்களில் போரை அறிவிப்பதற்கு பயன்படும். வெற்றியை தெரிவிப்பதற்கு வீரத்துடன் ஒலிக்கும்.
பலியிடும் காலங்களில் ஒலிக்கும்.

**7. வீரமுரசத்தின் அமைப்பு யாது?**
வீரமுரசத்தின் விளிம்பு கரு மரத்தால் செய்யப்பட்டது. அதன்மேல் போர்த்தப்பட்டிருப்பது எருதின் மயிர் சீவாத தோலாகும்.

**8. முரசுக் கட்டிலின் சிறப்புக்கள் எவை?**
அரசன் வீற்றிருக்கும் சிங்காசனம் போன்றது. வென்ற அரசன் தோற்ற அரசனின் முரசுக் கட்டில் ஒருவரை இருத்தி அவமானப்படுத்துவான்.

**9. இரும்பொறை மன்னன் செய்த செயல் என்ன?**
முரசுக் கட்டில் படுத்திருந்தவரை வெட்டுவதற்காக வாளை உருவினான்.
உறங்கிக்கொண்டிருப்பது புலவர் என அறிந்தவுடன் அவன் கோபம் குறைந்தது.
அவன் தூக்கத்துக்கு இடையூறு விளைவிக்காது அவருக்கு சாமரை வீசினான்.

**10. இரும்பொறை மன்னன் இவ்வாறு செய்ததற்கான காரணம் யாது?**
தமிழ் மீது அவன் கொண்ட பற்று.
புலவர் மீது அவன் கொண்ட நட்பு.

## பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

1. பெருங்சேரல் இரும்பொறை மன்னன் யாரை அவமதித்தான்?
2. இப்பாடத்தில் கூறப்பட்டுள்ள உவமைத்தொடர் என்ன?
3. புலவர் அரசனுக்கு கூறிய அறிவுரை என்ன?
4. அரசர் வீரமுரசத்தை எவ்வாறு வணங்கினார்?
5. பின்வரும் சொற்களுக்கு பொருள் தருக.
    - துயில்
    - கொடை
    - ஆசனம்
    - வியப்பு
    - சினம்
    - புகழ்
    - உயிர்
    - புலவர்
    - அவை
    - ஐயம்

### ஒரு பொருள் பல சொல்

- சூரியன் - ஞாயிறு, பகலவன், கதிரவன், ஆதவன்.
- வானம் - ஆகாயம், வான். விண், விசும்பு.
- நெருப்பு – தீ, அக்கினி, தழல், கனல்.
- பாட்டு – கவி, கவிதை, செய்யுள், பாடல், கீதம்.
- நித்திரை – துயில், உறக்கம், துஞ்சல், தூக்கம்.
- அன்பு – பரிவு, பற்று, நேயம், பாசம், ஈரம்.
- பகைவன் - விரோதி, எதிரி, சத்துரு.
- சபை – அவை, குழு, கூட்டம், சங்கம்.
- அரசன் - மன்னன், வேந்தன், கோன், கோ.
- அறிவாளி – படித்தோன், சான்றோன், கற்றோன், அறிஞன்.

### பின்வரும் ஒரு சொற்களுக்கான பல சொற்களை எழுதுக.

1. சினம் -
2. களி
3. மன்னன் -
4. பார் -
5. துயில் -
6. அகம் -
7. அம்பு –
8. மேனி –
9. தெரு –
10. பொழுது -

### ஒரு சொல் பல பொருள்.

- மதி – மதித்தல், புத்தி, சந்திரன், அறிவு.
- கவி – பாட்டு, புலவன், குரங்கு.
- திங்கள் - மாதம், சந்திரன். ஒரு நாளின் பெயர்.
- பதி – கணவன், இறைவன், வீடு.
- கண்டம் - கழுத்து, ஆபத்து, துண்டு, பூமியின் பெரும் பிரிவு.
- முடி – மகுடம் குடுமி, முடித்தல்.
- ஐயம் - பிச்சை, சந்தேகம், இரத்தல்.
- அன்னம் - சாதம், ஒருவகை பறவை, சோறு.
- மஞ்சு – அழகு, மேகம், வலிமை, ஆபரணம்.
- உரம் - நெஞ்சு, வலிமை, பசளை.

**பின்வரும் பல பொருளில் அமையும் ஒரு சொல்லை எழுதுக.**

1. பாட்டு, புலவன், குரங்கு –
2. மாதம், சந்திரன். ஒரு நாளின் பெயர் -
3. புல், நீக்கு, களைத்தல், சோர்வு –
4. படித்தல், வாசற்படி, வேதனம், கூலி –
5. உறவு, கட்டு, கயிறு, பாசம் -
6. வரிசை, அழகு, ஆபரணம், அணிதல் -
7. கடவுள். தொடக்கம, முதல் -
8. ஆபரணம், பாத்திரம், கப்பல் -

## அலகு 9
## சிலேடை

❖ சிலேடை பற்றிய விளக்கம் யாது?
சிலேடை என்பது சொல் அணிகளில் ஒன்று.
ஒரு சொல் அல்லது சொற்றொடர் இருபொருள் தரும் வகையில் பயன்படுத்தப்படும்.

❖ இதில் இடம்பெற்றுள்ள சிலேடைச் சொற்கள்
- அம்மாவாணை
- புத்தியில்லாதவன்.
- பழங்கள்.
- படுக்கவா.
- தாவரம்.

❖ புத்தியில் ஆதவன் என்பதன் பொருள் யாது?
அறிவில் சூரியனைப் போன்றவன்.

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. உள்ளம் சிரிப்பதற்கான காரணம் என்ன?
2. சாமியிடம் கேட்பது யாது?
3. உலகினை தழைக்க வைப்பது எது?
4. பழங்கள் பருகியவரின் நிலை என்ன?
5. குழந்தைகள் எப்போது சிரிக்கிறார்கள்?

**2.பின்வருவனவற்றுக்கு பொருள் தருக.**

1. சத்தியம் -
2. புத்தி –
3. ஆதவன் -
4. உள்ளம் -
5. முகம் -
6. உலகம் -
7. சாமி –
8. தலை –
9. சிரிப்பு –
10. பழம் -

**3.பின்வருவனவற்றுக்கு எதிர்ப்பொருள் தருக.**

1. பாலர் -
2. சிரிப்பு –
3. பாவம் -
4. பழம் -
5. பரபரப்பு -

**4. பின்வரும் சொற்களை வைத்து இருபொருள் தரும் வகையில் வாக்கியம் அமைக்குக.**

1. பலகை –
2. பெருங்காயம் -
3. தாவரம் -
4. அம்மாவாணை –
5. புத்தியில்லாதவன் -

## அலகு 10
## பென்சிலின் கதை

### 1.சுருக்கமான விடை தருக.

1. பென்சில் தயாரிப்பதற்கு பயன்படும் பொருட்கள் எவை?
2. பென்சில் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் பெறப்படும் இடங்கள் எவை?
3. பென்சிலின் நன்மைகள் எவை?
4. பென்சிலுக்கும் இறப்பருக்கும் உள்ள தொடர்பு யாது?
5. பென்சிலின் தரத்தை குறிக்கும் குறியீடு யாது?

### 2.தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| 1.சைபீரியா | காரியக்குச்சி |
| 2.1உக்ரேன் | பென்சிலின் தரம் |
| 3.ஜேர்மனி | போத்தோக் கோல் |
| 4.காரீயம் | பைன் மரம் |
| 5.BH குறியீடு | களிமண் |

### 3.இடைவெளி நிரப்புக

1. கடின பென்சில் …………. என்ற குறியீட்டால் குறிக்கப்படும்.
2. பென்சிலின் மீது எழுத்துக்களைப் பொறிக்க ………. பயன்படுத்தப்படுகிறது.
3. காரீயம் ……………… போன்று கருமையானது.
4. காரிய துகள்களை இணைப்பதற்கு ………….. பயன்படுத்தப்படுகின்றது.
5. எழுதும்போது தாளின் மீது எளிதாகப் படிவதற்கு ………… தேவைப்படுகிறது.

### 4.அட்டவணையை நிரப்புக.

| சொற்கள் | ஒத்த சொல் | எதிர்ச் சொல் |
|---|---|---|
| 1. கடினம் | …………... | ……………. |
| 2. சுத்தம் | …………… | ……………. |
| 3. நண்பன் | ……………. | ……………. |
| 4. பிறப்பு | …………… | ……………. |
| 5. பழைமை | …………… | ……………. |
| 6. உண்மை | …………… | ……………. |
| 7. முதல் | …………… | …………….. |
| 8. பாதி | …………… | …………….. |

### 5.பின்வரும் சொற்களைப் புணர்த்தி எழுதுக

1. பள்ளி + கூடம்
2. வெள்ளை + தாள்
3. தினம் + தோறும்
4. நதி + படுக்கை
5. தொழில் + சாலை

## 6.பின்வரும் சொற்களைப் பிரத்தெழுதுக.

1. அறுகோணம்
2. மற்றொன்று
3. முதலுதவி
4. பழங்காலம்
5. காரியக்குச்சி

## 7.கதை எழுதுதல்

ஓர் ஊரில் ஆடு ஒன்று இருந்தது. அது பக்கத்து ஊரில் உள்ள தன் நண்பனைப் பார்க்க விரும்பியது. நண்பனுக்கு அன்பளிப்பாக தேனை எடுத்துச் சென்றது. அவ்வூரை நோக்கி சென்றுகொண்டிருந்தபோது திடீரென மழை பெய்தது. அப்போது ஆடு ஒரு குகைக்குள் ஒதுங்க அங்கே ஒரு சிங்கமும் புலியும் ஒரு ஓநாயும் இருந்தன. அவை மூன்றும் ஆட்டை உண்பதற்கு விரும்பின. இதனை அறிந்த ஆடு அங்கிருந்து தப்பிப்பதற்காக ஒரு யோசனை செய்தது. அதாவது தன்னிடமுள்ள தேனை உண்டால் நீண்ட காலம் உயிர் வாழலாம் என்று கூறியதோடு மட்டுமல்லாது அதனை தனியாக உண்ண முடியாது அதனுடன் ஒரு காட்டு விலங்கையும் சேர்த்து உண்ண வேண்டுமெனக் கூறியது. இதனால் சிங்கம், புலி, ஓநாய் மூன்றும் ஒருவரையொருவர் தாக்க முற்பட்டவேளை அவை அங்கிருந்து ஓடின. இச்சந்தர்ப்பத்தில் மழை நின்றுவிடவும் ஆடு தப்பினேன் பிழைத்தேன் என்று ஓடிச் சென்றது.

**கதையை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

1. ஆடு யாரைப் பார்க்கச் சென்றது.?
2. ஆடு நண்பனுக்கு எதைக் கொண்டு சென்றது?
3. மழை வந்ததும் ஆடு எங்கே ஒதுங்கியது?
4. குகைக்குள் இருந்த விலங்குகள் எவை?
5. இக்கதையின் ஊடாக பெற்ற படிப்பினை யாது?

## 8.பின்வரும் கதையின் ஒரு பகுதியைத் தொடர்ந்து கற்பனையில் சிறிய கதை ஒன்றை எழுதுக.

ஓர் ஊரில் பரமன் என்ற தனவந்தன் ஒருவன் வசித்து வந்தான். அவனுக்கு ராமு, ராஜா என்ற இரு பிள்ளைகள் இருந்தனர். பரமன் தான் இறந்த பின் தன்னுடைய சொத்துக்களை நிர்வகிப்பதற்கு அண்ணன், தம்பி இருவரில் யாரை தேர்ந்தெடுப்பது என யோசித்தான். அதற்காக இருவருக்கும் அறிவு ரீதியான ஒரு போட்டி வைத்தான். அந்த வகையில் வீட்டின் ஓர் அறையை தெரிவுசெய்து யார் இதனை முழுமையாக நிரப்புகிறார்களோ அவர்களே எனது சொத்திற்கு உரிமையுடையவர்கள் எனக் கூறினான். அதனைத்தொடர்ந்து ……………………………….

## 9.பின்வரும் தலைப்பை அடிப்படையாகக் கொண்டு சுயமாக கதை ஒன்று எழுதுக.

"உயிர்களில் இரக்கம்."

## அலகு 11
## உயிர் காக்க பயிர் காப்போம்

### 1.பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக

1. மனிதனுடைய வாழ்வு செம்மை பெறுவதற்கு யாது செய்ய வேண்டும்?
2. மனிதனுடைய முதல் தேவை யாது?
3. பொய்யாமொழிப் புலவர் என அழைக்கப்பட்டவர் யார்?
4. ‘‘இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்

   நிலம் என்னும் நல்லாள் நகும்’’ என்ற குறளின் பொருளை எழுதுக?
5. நாம் எவற்றையெல்லாம் பயிரிட வேண்டும்?

### 2.பாடப்பரப்பினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக

1. உடல்
2. உழவு
3. உணவு
4. உயிர்
5. ஐயம்
6. சான்றோர்
7. திங்கள்
8. வியப்பு
9. சோலை
10. கேளீர்

### 3.பாடப்பரப்பினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் சொற்களுக்கு எதிர்ச் சொல் தருக

1. மகிழ்ச்சி
2. ஆக்கம்
3. ஆதி
4. குடிசை
5. வறுமை

### 4.வாக்கியம் அமைக்குக

1. சிற்றூர்
2. அறிவுரை
3. மழைப்பருவம்
4. தன்னிறைவு
5. சான்றோர்

### 5.சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குக.

1 தேவையே/முதல்/உணவுத்/தேவை

…………………………………………………………………….

2. பொறுத்து/அகழ்வாரையும்/நிற்கிறாள்/தாங்கி

……………………………………………………………………………..

3. பட்டறிவை/பகிர்ந்து/என்/கொள்கிறேன்/உங்களோடு

…………………………………………………………………………..

4. வந்தனை/உழவுக்கும்/செய்வோம்/தொழிலுக்கும்

………………………………………………………………………………

5 கூறி/வழிகாட்டுகின்றாள்/நிலத்தாய்/என்ன/எமக்கு

……………………………………………………………………………..

**6.பின்வரும் தலைப்பில் 100 சொற்களில் கட்டுரை ஒன்றை எழுதுக.**

**''இயற்கை வளம் கப்போம்''**

## பாடம் 12

## ஈசன் உவக்கும் இன்மலர்

01. 'ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று' எனும் பாடலைப் பாடியவர் யார்?
    சுவாமி விபுலானந்தர்
02. சுவாமி விபுலானந்தர் எங்கே பிறந்தார்?
    மட்டக்களப்பில் காரைதீவில்
03. இவரது இளமைப் பெயர் யாது?
    மயில்வாகனன்
04. சுவாமி விபுலானந்தர் எழுதிய நூல் எது?
    யாழ் நூல்
05. ஈசன் உவக்கும் இன்மலர்களையும் அவற்றின் மூலம் விளங்கிக்கொள்ளும் கருத்தையும் தருக?
    - உள்ளக்கமலம் - மனமாகிய தாமரை
    - கூப்பிய கைக்காந்தள் - வணங்கிய கையாகிய கார்த்திகைப்பூ
    - நாட்டவிழி நெய்தல் - விழியாகிய நெய்தல் மலர்
06. "ஈசன் உவக்கும் இன்மலர்" என்பதன் பொருள் எது?
    இறைவன் விரும்பும் இனியமலர்
07. இப்பாடலிலுள்ள அணிகள் எவை?
    உருவக அணிகள்
08. இப்பாடலில் வரும் இறைவனின் மறுபெயர்கள் எவை?
    மாப்பிள்ளை, வள்ளல், உத்தமனார், நாயகனார்

## பாடம் 13

## கடலும் கிணறும்

01. இக்கதை யாரால் எழுதப்பட்டது? எதிலிருந்து எடுக்கப்பட்டது?
    கி. வா. ஜகந்நாதனால்
    கிழவியின் தந்திரம் எனும் நூலிலிருந்து
02. அந்த ஊரில் வாழ்ந்தவர்கள் யார்?
    பெரிய உள்ளங்களைக் கொண்ட உபகாரிகள் சிலரும் அவர்களின் புகழை உலகுக்குத் தெரிவிப்பதற்காக குறுகிய மனம் படைத்த பலரும் அங்கிருந்தனர்.

03. அங்கிருந்த செல்வந்தர்கள் யாது செய்தனர்?
தங்கள் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தனர்
04. அங்கிருந்த செல்வந்தர்களில் ஒருவர் எதை வைத்து அறம் செய்தார்?
தன்னிடம் இருந்த நிலத்தை வைத்துக்கொண்டு
05. அவரைத் தேடி வந்தவர்கள் யார்?
புலவர்கள், அயலூரிலிருந்த ஏழைகள்
06. அவர் எதில் ஆர்வம் காட்டினார்?
தமிழில், அதனால் புலவர்களிடம் பாடலைக் கேட்டு மகிழ்வார்
07. ஔவையாரின் இயல்பு யாது?
நல்லவர்களை தேடிச்சென்று பாராட்டுவது
08. ஔவையார், இப்பெரியவர் எங்கு வாழ்வதாகக் கருதினார்?
பெரிய மாளிகையில்
09. அவர் ஔவையாரை எவ்வாறு புகழ்ந்தார்?
தாங்கள் இந்த ஊருக்கு எழுந்தருளியது கலைமகளே எழுந்தருளியது போல் இருக்கிறது. தாங்கள் தெய்வாம்சம் உடையவர். என்னை ஆசீர்வதியுங்கள் எனக் கூறினார்
10. ஔவையார் இவரை எவ்வாறு சிறப்பித்தார்?
கிணறு என்று
கிணற்றில் கிடைக்கும் நீர் சிறியது எனினும் தாகத்தை தீர்க்க வல்லது. மற்றும் வற்றாமல் நீர் வந்து கொண்டிருக்கும்.
11. ஔவையார் பிறரை எவ்வாறு சிறப்பித்தார்?
கடல் என்று
காரணம், கடல் அளவில் பெரியது தான் ஆனாலும் தாகத்திற்கு நீர் குடிக்க முடியாது.

## பாடம் 14
## கருங்காற் குறிஞ்சி

01. இத்தாவரம் எங்கு வளரும்.
மழைக்காடுகளும் புல்வெளிகளும் இணையும் பிரதேசத்தில்
02. இது எவ்வகைத் தாவரம்?
புதர்ச்செடி
03. இது எந்த நிறங்களில் இருக்கும்
நீலம், மஞ்சள் (அரியது)
04. இது பூக்கும் காலம் எது?
பல ஆண்டுகளுக்கு ஒருமுறை அதாவது 12 வருடம்
05. இதைப்பற்றி முதன்முதலில் குறிப்பெழுதியவர் யார்?
ராபெட் வைட் மற்றும் பெடொம் என அழைக்கப்படும் பிரித்தானியர்
06. தென்னிந்திய தாவரவியலின் பைபிள் எது?
Aora of Madras Presidency
07. யார் குறிஞ்சியின் வகைகள் பற்றி ஆராய்ந்தார்? அவை ஆராய்ந்த வகைகள் எத்தனை?
தாவரவியலாளர் கேம்பிள்
46 வகைகள்

08. Phlebophylum Kunthionum என்றால் என்ன?
கொடைக்கானல், நீலகிரி மலைகளில் வளரும் குறிஞ்சிக்கு ஆய்வாளர்களால் இட்டபெயர்
09. கோபன் வசித்த இடம் எது?
கோத்தகிரியில்
10. இவரது தந்தை எங்கு குடியேறினார்?
நீலகிரியில்
11. நீலகிரி மலையெங்கும் அவை பூத்திருந்தது பற்றி விபரமான குறிப்பெழுதியவர் யார்?
கோபனின் பாட்டி
12. தமிழ் மக்கள் நீலக்குறிஞ்சி என அழைக்கும் பூ எங்குள்ளது?
முக்குறுத்தி சரணாலயப் பகுதியிலும்
மாஞ்சூர் மலைகளிலும்
மணலூர் அருகிலும்
13. இச்செடியின் தோற்றம் யாது?
1 மீற்றர் உயரம், சிவப்பு நிறம், காம்பின் கணுக்கள் கறுப்பாகவும் காணப்படும்
14. நீலகிரி மலைக்கு அப்பெயர் வரக்காரணம் யாது?
இம்மலர் பூக்கும் காலத்தில் மலைத்தொடரே நீலநிறமாகக் காணப்படுவதால்
15. குறிஞ்சி பூத்துக்குலுங்கிய வருடங்களைப் பதிவு செய்தவர் யார்? முதலில் எந்தாண்டு பதிவு செய்யப்பட்டது.
கோபண் என்ற ஆங்கிலேயரால் 1858இல்
16. குறிஞ்சி மலர் பற்றிய கள ஆய்வை நடத்துபவர் யார்?
சலிம் அலி நிறுவனத்தைச் சேர்ந்த மிரியம் மாத்தூவா
17. குறுந்தொகை என்ற நூலில் கருங்காற் குறிஞ்சி எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?
கருங்காற் குறிஞ்சி பூக்கொண்டு
பெருந்தேனிழைக்கும் நாடனொடு நட்பே
18. Flora of Madras Presidency யை எழுதியவர் யார்?
தாவரவியலாளர் கேம்பிள்
19. குறிஞ்சி மலர்வதை பதிவு செய்தவர்கள் யார்?
கொடைக்கானலுக்கு அருகே உள்ள செம்பகனூர் கத்தோலிக்க மடத்துறவிகள்
20. குறிஞ்சிமலர் பற்றிய குறிப்பு காணப்படும் சங்ககாலத் தொகுப்பு எவை?
அகநானூறு, புறநானூறு
21. சூழலின் வகைகளில் மலைப்பிரதேசத்திற்கு குறிஞ்சி எனப் பெயரிடக் காரணம்
இங்கு குறிஞ்சி மலர் வளர்வதால்
22. முருகன் வள்ளியை மணந்த போது அணிவிக்கப்பட்ட மாலை எது?
குறிஞ்சி மலரால் தொடுக்கப்பட்ட மாலை

**மொழிவளம்**

01. உவமை அணி என்றால் என்ன?
தெரிந்த பொருளின் இயல்பை நினைவுறுத்தி தெரியாத பொருளின் இயல்பை விளக்குவதே உவமையணி

02. ஐந்து உவமைத் தொடரையும் பொருளையும் தருக?

- இலை மறை காய் போல – மறைவான நிலை
- வாடும் பயிருக்கு வான்மழை போல – துன்பத்துக்கு அபயம்
- ஏட்டுச் சுரைக்காய் போல – வாழ்விற்கு பயனின்மை
- ஊமை கண்ட கனவு போல – கூற முடியாத நிலை
- சிவபூசையில் கரடி புகுந்தது போல – நன்மைக்கு இடையூறு

03. விளம்பரத்தின் நன்மைகள் எவை?

- பயனாளிகள் மூலம் சேவை பற்றி அறியலாம்
- அப்பொருளின் விற்பனையை அதிகரிக்கும்
- பொருள்மீது நாட்டத்தை ஏற்படுத்தும்

04. துண்டுப்பிரசுரத்தின் நன்மைகள் எவை?

- விடயம் பற்றி அறிவுறுத்தலாம்
- கொள்கைக் கோட்பாடுகளை வெளிப்படுத்த உதவும்
- வேண்டுகோள் விடுக்க உதவும்

05. இரட்டை மொழி என்றால் என்ன?

இசை பற்றியும் பண்பு பற்றியும் குறிப்பு பற்றியும் அடிச்சொல் இரட்டித்துவரும். பிரித்தால் பொருள் வராது.

உ-ம் : கச கச, மட மட, குடு குடு

06. இணைமொழி என்றால் என்ன?

ஓசைநயம் பற்றி ஒத்தகருத்து, எதிர்க்கருத்து இணைந்து பொருட் செறிவுடையனவாய் மாறுதல்.

உ-ம் : அருமை பெருமை, அக்கம் பக்கம்

07. திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றுள் அடங்குபவை எவை?

**திணை**

உயர்திணை – மக்கள், தேவர், நரகர்
அஃறிணை – பகுத்தறிவு அற்றவை

**பால்**

ஆண்பால் - அவன், வந்தான்
பெண்பால் - அவள், வந்தாள்
பலர்பால் - அவர்கள், வந்தார்கள்
ஒன்றல்பால் - அது, வந்தது
பலவின்பால் - அவை, வந்தன

**எண்**

ஒருமை - ஒன்றைக் குறிப்பது
பன்மை - ஒன்றிற்கு மேற்பட்டதைக் குறிப்பது

இடம்

தன்மை - நான், யாம், நாம், வந்தேன்
முன்னிலை - நீ, நீவிர், நீங்கள், வந்தாய்
படர்க்கை - அவன், அவள், அது

**காலம்**

நிகழ்காலம் - நடப்பது
இறந்தகாலம் - நடந்தது
எதிர்காலம் - நடக்கவிருப்பது

## பெயர்ச் சொல்

ஒரு பொருளின் பெயரைக்குறிக்கும் சொல் பெயர்ச் சொல் எனப்படும்

பெயர்ச் சொல் ஆறு வகைப்படும்.

1. **பொருட் பெயர்**: ஏதாவது ஒரு பொருளின், உயிரினங்களின் பெயரைக் குறிக்கும் சொல்.
   உதாரணம்: கதிரை, மாலா, புத்தகம்
2. **இடப்பெயர்**: இடங்களின் பெயரைக் குறிக்கும் சொல்.
   உதாரணம்: யாழ்ப்பாணம், வீடு, பாடசாலை.
3. **காலப் பெயர்**: ஒரு காலத்தின் பெயரைக் குறிக்கும் சொல்.
   உதாரணம்: நேற்று, கார்த்திகை, கோடை
4. **சினைப் பெயர்**: ஒருபொருளின் பகுதியை அல்லது உறுப்புக்களைக் குறிக்கும் சொல்
   உதாரணம்: கண், இறகு, கிளை
5. **குணப் பெயர்**: நிறம், சுவை, வடிவம், உணர்ச்சி போன்றவற்றின்பண்புகளைக் குறிப்பது.
   உதாரணம்: பச்சை, இனிப்பு, வட்டம், அழுகை
6. **தொழிற் பெயர்:** ஒரு தொழிலின் செயலைக் குறிப்பது.
   உதாரணம்: ஆடல், பாடல்

## வினைச் சொல்

ஒரு செயலை உணர்த்தும் சொல் வினைச் சொல் எனப்படும்.

உதாரணம்: ஓடினான், பாடினேன், படிப்பான், எழுதுகின்றேன்.

### பின்வரும் சொற்களைப் பெயர்ச் சொல், வினைச் சொல் என வகைப் படுத்துக.

(குளம், வருத்தின, கண்ணன், கால்கள், பார்த்தனர், என்றன, தம்பி, சொல்லுவோம், சிறுவர், திறந்தது)

| **பெயர்ச் சொல்** | **வினைச் சொல்** |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

## பின்வரும் சொற்களைக் கொண்டு அட்டவணையைப் பூர்த்தி செய்க.

(குளிர், கோபம், வவுனியா, இலை, வானம், கமலன், சதுரம், சிங்கம், நாளை, மூக்கு, துள்ளுதல், சித்திரை, மாடு, புளிப்பு, இலங்கை, கொம்பு, வருதல், கோயில், காலை, கதிரை, படித்தல், ஓடுதல்)

| பொருட் பெயர் | இடப் பெயர் | காலப் பெயர் | சினைப் பெயர் | குணப் பெயர் | தொழிற் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**இரட்டைக்கிளவி:** தனித்து நின்று பொருள் தராமல் ஒரு சொல் அடுத்தடுத்து இரண்டு முறைவருமானால் அது இரட்டைக் கிளவி எனப்படும்

1. கடகட
2. மடமட
3. கமகம
4. கலகல
5. சிடுசிடு
6. குடுகுடு
7. கலீர்கலீர்
8. பளபள
9. கிறுகிறு
10. வளவள

**இணைமொழிகள்:** இச்சொற்கள் எதிர்ப் பதமாகவும் ஒத்த பதமாகவும் இணைந்து கருத்தை வெளிப்படுத்தும்

1. ஆதிஅந்தம்
2. ஆறஅமர
3. விருப்புவெறுப்பு
4. சீரும்சிறப்பும்
5. பழக்கவழக்கம்
6. எலும்பும்தோலும்
7. கள்ளங்கபடம்
8. குன்றும் குழியும்
9. மேடுபள்ளம்
10. உயர்வுதாழ்வு

**அடுக்குத்தொடர்:** தனித்து நின்று பொருள் தரக்கூடிய ஒருசொல் அடுத்தடுத்து இரண்டுமுறை வருவது அடுக்குத்தொடர் எனப்படும்.

1. அடுத்தடுத்து
2. விடியவிடிய
3. பாம்புபாம்பு
4. மேலேமேலே
5. விழுந்துவிழுந்து
6. உயரஉயர
7. துள்ளித்துள்ளி
8. ஓடிஓடி
9. கீழேகீழே
10. சின்னச்சின்ன

## பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.

(இன்பதுன்பம், மடமட, குடுகுடு, அல்லும்பகலும், உயரஉயர)

1. பாட்டி………………… என நடந்து சென்றாள்.
2. பறவை…………………..பறந்து சென்றது
3. தம்பி தண்ணீரை…………………..எனக் குடித்தான்
4. மனிதனது வாழ்வில் ………………………..மாறி மாறி வரும்
5. அப்பா …………………………… அயராது உழைத்தார்

**பளளளளளளளளின்வரும் இணை மொழிகளைப் பூர்த்தி செய்க.**

1. பாலும்…………………
2. கள்ளம்…………………
3. கொடுக்கல்………………
4. மூலை…………………..
5. பூவும்……………………
6. ஏறக்…………………….
7. ஓட்டமும்………………..
8. வரவும்………………….
9. நன்மையும்………………
10. காலையும்………………

**மூவிடப்பெயர்:** இடப்பெயர்கள் மூன்று வகைப்படும்

**தன்மை:** பேசுவோனைக் குறிக்கும்

உதாரணம்: நான், யான் - தன்மை ஒருமை

நாம், நாங்கள் - தன்மைப் பன்மை

**முன்னிலை:** கேட்பவனைக்குறிக்கும்

உதாரணம் நீ – முன்னிலை ஒருமை

நீங்கள், நீர் - முன்னிலைப் பன்மை

**படர்க்கைப் பெயர்:** பேசப்படும் பொருளைக் குறிக்கும்

உதாரணம்: அவன், அவள், அது – படர்க்கை ஒருமை

அவர்கள், அவைகள் - படர்க்கைப் பன்மை

## பொருத்தமான விடை எழுதுக.

1. தன்மை ஒருமை ஒன்று தருக. ……………………
2. தன்மைப் பன்மை ஒன்று தருக…………………….
3. முன்னிலை ஒருமை ஒன்று தருக. ……………………
4. முன்னிலைப் பன்மை ஒன்று தருக…………………….
5. படர்க்கை ஒருமை ஒன்று தருக. ……………………
6. படர்க்கைப் பன்மை ஒன்று தருக…………………….

## இடைவெளி நிரப்புக.

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| 1.அரசன் | ………………….. |
| 2…………………. | இறைவி |
| 3.பாங்கன் | …………………… |
| 4…………………… | தேவி |
| 5………………….. | தோழி |
| 6.சுந்தரன் | ………………….. |
| 7…………………… | அடியாள் |
| 8.கணவன் | …………………. |
| 9.அவன் | …………………. |
| 10…………………… | ஒருத்தி |
| 11……………………. | புதல்வி |
| 12.மகன் | ………………….. |

## இணைத்தல் (எதிர்க் கருத்து)

| | |
|---|---|
| 1.கனவு | துன்பம் |
| 2.வாட்டம் | இரவு |
| 3.உண்மை | நனவு |
| 4.இன்பம் | மலர்வு |
| 5.பகல் | பொய் |

## பின்வரும் வாக்கியங்களில் காணப்படும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எழுதுக.

1.முகம் வாடியிருக்கிறது

2.கண்ணகிக்கு நீதி தாருங்கள்

3.கண்ணகி சிலம்பை எறிந்தாள்

4.நான் தீக்கனவு கண்டேன்

5.அவன் எல்லாச் செல்வங்களையும் பெற்றவள்.

| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

## பின்வரும் சொற்களை வைத்து பொருத்தமான வாக்கியம் எழுதுக.

1.தினை
2.திணை
3.என்
4.எண்
5.அரி
6.அறி
7.அரை
8.அறை
9.வலி
10.வழி
11.வளி

## 5.உரிய நிறுத்தக் குறியீடுகளை இடுக.

தேவியரே மன்னிக்க வேண்டும் உங்கள் முகம் பொலிவு இழந்திருக்க காரணம் யாது எனக்கு விடிகாலையில் தீக்கனவுகள் வந்தன இரவில் இந்திரவில் இட்டிருந்தது பகலில் விண்மீன்கள் விழுந்தன சூரியனை விழுங்கக் கூடிய இருள் உண்டாயிற்று இறை அருள் பெற்றவர்களுக்கு நாள் கோள் வினைப்பயன் வலிதற்றுப் போகும் என்றாள்

## 6.பின்வரும் வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு கீழ் உள்ள அட்டவணையை நிரப்புக.

1.பாங்கி கூறினாள்
2.கோவலன் ஊழ்வினையால் கொலையுண்டான்
3.அரசன் அரியணையில் சாய்கிறான்
4.வாயிற் காவலர்கள் வருகின்றனர்
5.நாம் அரச சபைக்குப் போவோம்

| இல | திணை | பால் | எண் | இடம் | காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |

## வேற்றுமை

மாலா வந்தாள்
மாலாவைக் கண்டேன்.
மாலாவினால் செய்யப்பட்டது.
மாலாவிற்குக் கொடுத்தேன்
மாலாவின் புத்தகம்
மாலாவினது கை
மாலாவிடம் உள்ளது.
மாலா , வா

மேற்கூறப்பட்ட வாக்கியங்கள் வெவ்வேறு கருத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன. இவ்வாறு ஒரு பெயர்ச்சொல் வெவ்வேறு உருபுகளை ஏற்று வேறுபட்டு வருவதனையே வேற்றுமை என்போம்.

> வேற்றுமை என்பது வாக்கியத்தில் பெயர்ச்சொற்களின் இலக்கணத் தொழிற்பாடு வேறுபட்டு வருவது ஆகும்.

- பெயர்ச்சொற்களின் சிறப்பு இலக்கணம் வேற்றுமை உருபுகளை ஏற்பதாகும்.
- வேற்றுமை உருபுகளாவன :- ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலானவற்றைக் குறிப்பிடலாம்
- தமிழில் 8 வகையான வேற்றுமை உண்டு என பழந்தமிழிலக்கணகாரர் கூறுவர்.

**வேற்றுமை அட்டவணை**

| வேற்றுமை | உருபு | சொல்லுருபு | பொருள் | உதாரணம் |
|---|---|---|---|---|
| முதலாம் வேற்றுமை | இல்லை | ஆனவன்<br>என்பவன்<br>ஆகின்றவன் | எழுவாய்ப்பொருள் | மரம் உயரமாக வளர்ந்திருக்கிறது |
| இரண்டாம் வேற்றுமை | ஐ | - | செயப்படுபொருள்<br>1. ஆக்கல்<br>2. அழித்தல்<br>3. அடைதல் | 1.பாலன் வீட்டைக் கட்டினன்.<br>2.மாணவன் கதிரையை உடைத்தான். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 4. நீத்தல்<br>5. ஒத்தல்<br>6. உடைமை | 3.நான் பாடசாலையை அடைந்தேன்<br>4.நான் ஊரை நீங்கினேன்.<br>5.குமார் புலியைப் போலப் பாய்ந்தான்.<br>6.பொன்னன் நிறைய சொத்துக்களை வைத்திருக்கிறான் |
| மூன்றாம் வேற்றுமை | ஆல்<br>ஆன்<br>ஒடு<br>ஓடு | கொண்டு<br>மூலம்<br><br><br>உடன் | கருவிப் பொருள்<br>கருத்தாப்பொருள்<br><br><br>உடனிகழ்ச்சிப்பொருள் | 1.ரவி கத்தியால் வெட்டினான்.<br>2.திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.<br>3.தந்தையோடு மகன் சென்றான். |
| நான்காம் வேற்றுமை | கு | ஆக<br>பொருட்டு<br>நிமித்தம் | 1.கொடை<br>2.பகை<br>3.நட்பு<br>4.தகுதி<br>5.உறவு<br>6.முதற்காரணம்<br>7.நிமித்தகாரணம் | 1.மாணவனுக்கு பரிசு கொடுத்தார்<br>2.கீரிக்கு பகை பாம்பு<br>3.இராமனுக்கு நண்பன் குகன்<br>4.அரசனுக்கு உரியது முடி<br>5.தசரதனுக்கு மகன் இராமன்<br>6.பிட்டுக்கு மா குழைத்தாள்<br>7.கூலிக்கு வேலை செய்தான் |
| ஐந்தாம் வேற்றுமை | இல்<br>இன் | நின்று<br>இருந்து<br>விட | நீங்கல்<br>எல்லை<br>ஒப்பு<br>ஏது | 1.தம்பி ஊரிலிருந்து நீங்கினான்<br>2.இந்தியாவின் தெற்கே இலங்கை உள்ளது |
| ஆறாம் வேற்றுமை | அது<br>ஆது | உடைய | உடைமைப் பொருள் (கிழமைப் பொருள்)<br>1. தற்கிழமை<br>2. பிறிதின்கிழமை | 1.ராதாவினது கண்<br>2.எனது புத்தகம் |
| ஏழாம் வேற்றுமை | கண்<br>இல்<br>உள் | - | இடப்பொருள் | மலைக்கண் கோயில் உள்ளது. |
| எட்டாம் வேற்றுமை | - | - | விளிப்பொருள் | கண்ணா வா |

**மேற்காட்டப்பட்டுள்ளஅட்டவணையைப் பயன்படுத்திப் பின்வரும் வாக்கியங்களிலுள்ள வேற்றுமையை இனங்கண்டு வேற்றுமை உருபுகளையும் பொருள்களையும் இனங்கண்டு கூறுக.**

1. கிராமத்தினது அழகு அற்புதமானது.

……………………………………..

…………………………………….

2. சுமன் கூலிக்கு வேலை செய்து வந்தான்

…………………………………….

…………………………………….

3. மாதவி நண்பியோடு சென்றாள்

……………………………………

…………………………………….

4. அம்மா குழந்தைக்காக பால் வாங்கினாள்

…………………………………….

…………………………....................

5. சேது வீட்டை இடித்தான்

……………………………………

……………………………………

## பிராணிகளின் இளமைப் பெயர்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | நாய் | - | குட்டி, குருளை | 11. | ஆமை | - | குஞ்சு |
| 2. | சிங்கம் | - | குருளை | 12. | கீரி | - | பிள்ளை |
| 3. | பூனை | - | குட்டி, பறள் | 13. | காகம் | - | குஞ்சு |
| 4. | குரங்கு | - | பறள், குட்டி | 14. | கோழி | - | குஞ்சு |
| 5. | ஆடு | - | குட்டி | 15. | தவளை | - | பேத்தை, குஞ்சு |
| 6. | புலி | - | குட்டி | 16. | மீன் | - | குஞ்சு |
| 7. | குதிரை | - | குட்டி | 17. | எலி | - | குஞ்சு |
| 8. | பாம்பு | - | குட்டி | 18. | மான் | - | குட்டி, கன்று |
| 9. | கிளி | - | குஞ்சு, பிள்ளை | 19. | பசு | - | கன்று |
| 10. | அணில் | - | குஞ்சு, பிள்ளை | 20. | யானை | - | போதகம்/கன்று/குட்டி |

## தாவரங்களின் இளமைப் பெயர்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | மா | - | கன்று | 7. | கமுகு | - | பிள்ளை, கன்று |
| 2. | பலா | - | கன்று | 8. | தென்னை | - | பிள்ளை |
| 3. | வாழை | - | கன்று, குட்டி | 9. | பனை | - | வடலி |
| 4. | மூங்கில் | - | கன்று | 10. | நெல் | - | நாற்று |
| 5. | வேம்பு | - | கன்று | 11. | புகையிலை | - | நாற்று |
| 6. | எலுமிச்சை | - | கன்று | | | | |

## ஆண் பெண் மரபுப் பெயர்கள்

| உயிரினம் | ஆண் | பெண் |
|---|---|---|
| 01. பூனை | கடுவன் | பெட்டை |
| 02. நாய் | கடுவன் | பெட்டை |
| 03. குரங்கு | கடுவன் | மந்தி |
| 04. மயில் | போத்து | அளகு |
| 05. புலி | போத்து | பிணா |

| | | | |
|---|---|---|---|
| 06. | மான் | கலை | பிணை |
| 07. | யானை | களிறு | பிடி |
| 08. | சிங்கம் | ஏறு | பெட்டை |
| 09. | கோழி | சேவல் | பேடு, பெட்டை |
| 10. | நண்டு | அலவன் | பெட்டை, பெடை |
| 11. | குதிரை | குண்டு | வடவை, பெட்டை |
| 12. | ஆடு | கடா | மறி |
| 13. | நரி | ஓரி | பாட்டி |
| 14. | மாடு | ஏறு, காளை, எருது | நாகு, பசு |

### பிஞ்சு மரபுப் பெயர்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | வெண்டி | - | பிஞ்சு | 5. | பனை | - | நுங்கு |
| 2. | கத்தரி | - | பிஞ்சு | 6. | தென்னை | - | குரும்பை |
| 3. | பூசணி | - | பிஞ்சு | 7. | வாழை | - | கச்சல் |
| 4. | மா | - | வடு | 8. | பலா | - | மூசு |

### பிராணிகளின் மலங்களின் மரபுப் பெயர்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஒட்டகம் | - | இலத்தி, இலண்டம் | 6. | கழுதை | - | விட்டை |
| 2. | யானை | - | இலத்தி, இலண்டம் | 7. | எருது | - | சாணம் |
| 3. | குதிரை | - | இலத்தி, இலண்டம் | 8. | மாடு | - | சாணம் |
| 4. | பறவை | - | எச்சம் | 9. | எலி | - | பிழுக்கை |
| 5. | ஆடு | - | பிழுக்கை | 10. | முயல் | - | பிழுக்கை |

### தொனிகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | மயில் | - | அகவும் | 18. | அணில் | - | கீச்சிடும் |
| 02. | பூனை | - | கத்தும் | 19. | ஆந்தை | - | அலறும் |
| 03. | வானம்பாடி- | | பாடும் | 20. | குரங்கு | - | அலப்பும் |
| 04. | தேனீ | - | ரீங்காரம் செய்யும் | 21. | தேவாங்கு | - | அழும் |
| 05. | புறா | - | குறுகுறுக்கும் | 22. | புலி | - | உறுமும் |
| 06. | சிங்கம் | - | கர்ச்சிக்கும் | 23. | குதிரை | - | கனைக்கும் |
| 07. | குயில் | - | கூவும் | 24. | பல்லி | - | சொல்லும் |
| 08. | குருவி | - | கீச்சிடும் | 25. | எருமை | - | எக்காளமிடும் |
| 09. | ஆடு | - | கத்தும் | 26. | காகம் | - | கரையும் |
| 10. | எலி | - | கீச்சிடும் | 27. | கழுதை | - | கத்தும் |
| 11. | யானை | - | பிளிறும் | 28. | ஓநாய் | - | ஊளையிடும் |
| 12. | கழுதை | - | கத்தும் | 29. | கரடி | - | உறுமும் |
| 13. | பசு | - | கதறும் | 30. | பன்றி | - | உறுமும் |
| 14. | பாம்பு | - | சீறும் | 31. | தவளை | - | கத்தும் |
| 15. | கோழி | - | கொக்கரிக்கும் | 32. | நரி | - | ஊளையிடும் |
| 16. | சேவல் | - | கூவும் | 33. | வண்டு | - | இரையும் |
| 17. | நாய் | - | குரைக்கும் | | | | |